11. அரசினர் தீர்மானம்

பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றை தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2024) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

12. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2024), மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2024)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 21-2-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2024) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

13. வரவு-செலவுத் திட்டம் மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2024-2025, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2024–2025 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின்மீது பொது விவாதம். நிதிநிலை மற்றும் வேளாண்மை நிதிநிலை ஆகிய இரண்டு அறிக்கைகளிலும் 7 மாமன்ற உறுப்பினர்கள் இன்று மதியம் 2–00 மணிவரை பேசவிருக்கின்றார்கள். 7 பேரில் முதன்முதலாகப் பேச வருகின்ற மாண்புமிகு உறுப்பினருக்கு 10 நிமிடங்களும், அதன்பின் பேச வருகின்றவர்களுக்கு 7 நிமிடங்களும் வழங்கப்படும்.